# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 27 செவ்வாய்க்கிழமை 14.05.2024 கதிர் 257







# இறுதி யுத்தத்தின் கொடூரங்களையும் வன்முறைகளையும் நினைவு கூருவதை நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்!

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

**இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதிகளில் இடம்பெற்ற கொடூரங்கள் மற்றும் வன்முறைகளை நினைவு கூருவதை நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம், என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.**

**முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுவதை தடை செய்யும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் அதற்காக தெரிவிக்கப்படும் காரணங்களும் இதனை தெளிவாக வெளிப்படுத்துவதாக, அவர் தனது சமூக வலைத்தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**





## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பொலிசாரால் எச்சரிக்கை விடுப்பு!


முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டு வடக்கு கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இன்று காலை கல்முனை பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட சங்கம்பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பெரியநீலாவணைப் பொலிஸார், கல்முனை நீதவான் நீதிமன்றத்தின் தடை உத்தரவைக் காண்பித்து குறித்த நிகழ்வினை நிறுத்துமாறு கூறியுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் என்பவருக்கு தடை உத்தரவு உள்ளதாகவும் குறித்த நிகழ்வினை நிறுத்துமாறும் 2➤

## சபைக்கு வராமல் வீட்டில் முடங்கிய எம்.பி. க்கள்?



கேள்விகள் கேட்ட எம்.பி.க்கள் பலர் நாடாளுமன்றத்திற்கு சமூகம் தராததால், அவர்கள் அனைவரும் இன்று விடுமுறையில் வீட்டில் உள்ளனர் போலும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அசோக் அபேசிங்க 2➤

## வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் இன்று யாழ். வடமராட்சி - வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பூர்வீக வீட்டுக்கு அருகில், ஆலடிச் சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதன்போது, முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து இரு மாவீரர்களின் தந்தையால் பொதுச்சுடரேற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

## ரஷ்ய - உக்ரைன் போரில் கூலிப்படையாக சென்ற 11 இலங்கையர்கள் உயிரிழப்பு!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

ரஷ்ய - உக்ரைன் போரில் இதுவரை 11 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது. சர்வதேச மற்றும் இலங்கை தரகர்கள் குழுவொன்று இந்த யுத்தத்திற்காக இலங்கையர்களை கூலிப்படையாக ஆட்சேர்ப்பதில் முனைப்பு காட்டி, போலியான வாக்குறுதிகளை வழங்கி ரஷ்ய உக்ரைன் போருக்கு இலங்கையர்களை 2➤



# கெஹலியவின் ரிட் மனு 31 ஆம் திகதி விசாரணை

தரமற்ற மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை முடியும் வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த ரிட் மனுவை எதிர்வரும் 31 ஆம் திகதி பரிசீலிக்கவுள்ளதாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த மனு இன்று நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த வழக்கு விசாரணைகள் முடியும் வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி சுகாதார அமைச்சின் முன்னாள் விநியோகப் பணிப்பாளர் கபில விக்கிரமநாயக்கவினாலும் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த ரிட் மனுவை பரிசீலிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் இம்மாதம் 30ஆம் திகதி கூடுமாறு உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 116 எம்.பி. க்களுக்கு வாகன காய்ச்சல்

வரியில்லா வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு 116 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கட்சித் தலைவர் கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

அதற்காக ஆளும் கட்சி எம்.பி.க்கள் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கையொப்பமிட்டு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை கடிதமொன்றை கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(ரெம-55)

## ரஷ்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இத்தகைய நிலையில், இறந்தவர்களின் எண்ணிக்கையை இன்னமும் துல்லியமாக கூற முடியாதுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெம-50)

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறி தடை உத்தரவை வழங்கினர். அத்துடன் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவிக்கும் பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் பகுதியில் மூன்று பேரும் பல்கலைக்கழக மாணவி ஒருவருமாக நால்வர் சம்பூர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## இறுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனிடையே, கஞ்சி பரிமாறுவதற்கு கல்முனை நீதிமன்றமும் தடைவிதித்துள்ளததாகத் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தைப் பொறுத்தவரை மே 18 ஆம் திகதியை நினைவுகூருவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் கொடுப்பதாகும், எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பரிமாறுவதை பொலிஸார் தடுக்கும் செயற்பாடுகள், அமைச்சர் டிரான் அலஸின் உத்தரவின் கீழ் இடம்பெறுகின்றதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்வதற்கான காரணங்கள் நோய் பரவுவதைத் தடுப்பதிலிருந்து, தமிழீழ விடுதலைப்புலிகள் புத்துயிர் பெறுவதைத் தடுப்பதாக மாற்றமடைந்துள்ளதாகவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். (04)

# விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பதில் செயலாளர் கீர்த்திக்கு இடையூறு செய்வதை தடுக்கும் வகையில் தடையுத்தரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நிறைவேற்று சபையினால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ, பதில் செயலாளரான சட்டத்தரணி கீர்த்தி உடவத்த மற்றும் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர்கள் ஆகியோரின் கட்சிப் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதைத் தடுக்கும் வகையில் கடுவெல மாவட்ட நீதிபதி துலானி விக்ரமசூரிய நேற்று (13) தடை உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தின் போது கட்சியின் தலைவராக விஜயதாச ராஜபக்ஷவும், செயலாளராக கீர்த்தி உடவத்தவும் தெரிவு செய்யப்பட்டதுடன், 20 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களான தமது பணிகளை முன்னெடுப்பதில் தமக்கு இடையூறுகள் செய்யப்படுவதாகவும் தெரிவித்து செயற்குழு உறுப்பினர்களான இசுரு அபேவர்தன, சுமித் விஜயமுனி டி சில்வா ஆகியோர் மேற்படி நீதிமன்றத்தில் மனுவை முன்வைத்திருந்தனர்.

மனுவின் எதிர்மனுதாரர்கள் இது தொடர்பாக தமது பக்க நியாயங்களை சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்டதோடு, இடைக்கால தடை அறிவிப்பையும் அனுப்புமாறும் உத்தரவிட்ட மாவட்ட நீதிபதி, மனுவை எதிர்வரும் 27 ஆம் மீண்டும் விசாரணைக்கு எடுப்பதாக அறிவித்தார்.

(ரெம-53)

# ரஷ்ய இராணுவத்தினர் கூலிப்படைகளை ‘பலிக்கடாக்கலாக’ பயன்படுத்துகின்றனர்

## உக்ரைன் ஊடகங்கள் தெரிவிப்பு



ரஷ்ய இராணுவத்தினர் தமது இராணுவத்தில் சேர்த்த கூலிப்படையினரை ‘பலிக்கடாக்கலாக’ பயன்படுத்துவதாக உக்ரைன் ஊடகங்கள் கூறுகின்றன. நேபாளம், சோமாலியா, இந்தியா மற்றும் கியூபா ஆகிய நாடுகளிலிருந்து இவ்வாறு கூலிப்படையினராக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்து ரஷ்ய ராணுவத்தில் இணைந்த வீரர்கள் குறித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு தனியாக விசாரணை நடத்தி வருகின்றது.

ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்த நூற்றுக்கணக்கான நேபாள வீரர்கள் ராணுவ முகாம்களை விட்டு வெளியேறி தப்பியோடி உள்ளனர். மாதாந்த சம்பளம் இரண்டாயிரம் டொலர்கள் என்ற வாக்குறுதியின் காரணமாக சோமாலியர்கள் பலர் ரஷ்ய இராணுவத்தில் இணைந்ததாதாகவும் கூறப்படுகின்றது.

(ரெம-52)

# வசிப்பிடம் மாறி பதுங்கியிருக்கும் சட்டவிரோதிகளை தேடி வேட்டை

நாடளாவிய ரீதியில் பல்வேறு வகையான குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடும் நபர்கள் தாம் நிரந்தரமாக குடியிருக்கும் பொலிஸ் பிரிவுகளிலிருந்து வெளியேறி பிற இடங்களில் வீடுகளிலும் வாடகை அறைகளிலும் தங்கி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலின்படி, பொலிஸ் கட்டளை சட்டம் இல.76 பிரிவின் கீழ் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தற்காலிகமாக வசிப்பவர்கள் தொடர்பாக மே 11 மற்றும் 12 ஆகிய இரண்டு தினங்களில், தகவல் சேகரிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெம-49)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# முல்லைக் கைத்தறி நெசவாலை புதுக்குடிருப்பில் திறந்துவைப்பு






வடக்குக்கிழக்குப் பொருளார மேம்பாட்டு நடுவத்தினால் கனடியத்தமிழ்பேரவையின் முன்னெடுப்பில் புதுக்குடிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் முல்லைக் கைத்தறி நெசவு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இயங்கா நிலையில் உள்ள தொழிற்சாலைகளைப் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் (குறிப்பாகப் பெண்கள்) வெற்றிகரமாக இயக்க முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டத்தின் வாயிலாக இந்த நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் மற்றும் எழுகை மாற்றுத் திறனாளிகள் சங்கத்துடன் இணைந்து இந்த தொழில் முயற்சி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சிவராசசிங்கம் ஜெயகாந்த், பிரதேச சபைச் செயலாளர் சச்சிதானந்தம் கிரிசந்தன், கனடியத் தமிழர் பேரவையின் மாந்த நேயப் பணிகளுக்கான இணைப்பாளர் துரைரத்தினம் இராசலச்சுமி துசியந்தன், வடக்குக் கிழக்கு பொருளாதார மேம்பட்டு நடுவதின் இயக்குனர் சோதிலிங்கம் பிரதீபன் ஆகியோரால் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இந்த ஆலை திறந்து வைக்கப்பட்டது.

இவர்களுடன்வேறு பல பிரதேச செயலக அதிகாரிகளும் உள்ளூர் தொழில் முனைவோரும் பயனாளர்களும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயக் குளிர்த்தி பாரம்பரிய கல்யாணக்கால் நடப்பட்டது





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்திச் சடங்கு நேற்று 13) திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக விசேட பூசை வழிபாடு இடம் பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறைமேளம் அடித்து, கடற்கரைக்கு சென்று கடல் தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாணக் கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையிலே அரோகரா கோஷம் மற்றும் குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் நடப்பட்டது.

நேற்று முன்தினம் திங்கள் ஆரம்பமாகிய இச்சடங்கு தொடர்ந்து 8 தினங்கள் நடைபெற்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

இன்று மாலை சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறுகின்றன.

தொடர்ந்து தாளை புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பிற்பகல் 1 மணிக்கு பூசையும் மாலை 7மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

20ஆம் திகதி திஙகட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள் (21) செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம்ச டங்கு 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறும்.



# இணுவிலில் இயங்கிய போதைப்பொருள் உற்பத்தி நிலையம் கண்டறியப்பட்டது!






யாழ்ப்பாணம் இணுவிலில் போதைப்பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையமொன்று கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருளை விற்பனை செய்யும் கும்பலைத் தேடிச்சென்றபோது, வீடொன்றில் இயங்கிய போதைப்பொருள் உற்பத்தி நிலையம் யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, ஐஸ் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, இந்த போதைப்பொருள் உற்பத்தி நிலையம் நேற்று முற்றுகையிடப்பட்டது. குறித்த நிலையம் இரசாயான ஆய்வு கூடத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டு, இரசாயனப்பொருட்களைப்பயன்படுத்தி போதைப்பொருள் உற்பத்தி அங்கு நடைபெற்றதாக சட்ட வைத்திய அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டு இன்று உறுதிப்படுத்தினார்.

வாள்வெட்டுக் கும்பலொன்றில் இயங்கும் ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலேயே குறித்த நிலையம் இயங்கியுள்ளதுடன் பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு எவரும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், போதைப்பொருள் உற்பத்திக் கூடத்தை இயக்கிய பிரதான குற்றவாளிகளைத் தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலதிக விசாரணைகளுக்காக குறித்த வீடு பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினரை அழைத்து விசாரணை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (01)

# அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் உக்ரைன் அதிபருடன் இன்று ஆலோசனை



உக்ரைன் அதிபருடன் அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் ஆலோசனை நடத்தவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

போலந்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த அவர், அங்கிருந்து புகையிரதம் மூலம் அண்டை நாடான உக்ரைனுக்கு இன்று காலை சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வித முன்னறிவிப்புமின்றி உக்ரைனுக்கு அவர் திடீர்ப் பயணம் மேற்கொண்டிருப்பது, உக்ரைன் அரசுக்கு சற்று அதிர்ச்சியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உக்ரைன் தலைநகர் கீவ் நகருக்கு இன்று காலை திடீர்ப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் அண்டனி பிளிங்கன், அந்நாட்டு அதிபர் வொலோடிமிர் ஸெலென்ஸ்கியுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

அப்போது ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுடன் அமெரிக்கா துணை நிற்கும் என்ற நிலைப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக, உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியில் ரஷ்யப் படைகள் முன்னேறி தாக்குதல்களை அரங்கேற்றி வரும் சூழலில், உக்ரைனுக்கு அமெரிக்கா 400 மில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவ உதவிகள் அடங்கிய தொகுப்பை வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலரின் இந்தத் திடீர்ப் பயணம் அமைந்துள்ளது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அமெரிக்கா அறிவித்திருக்கும் உதவியில் உக்ரைன் ராணுவத்துக்குத் தேவையான வான் பாதுகாப்பு ஏவுகணைகள் முக்கிய ஆயுதங்களாக உள்ளடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# கிளிநொச்சியில் இன்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சி






முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாளான இன்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு தடைகளைத் தாண்டி பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதே வேளை, கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்திலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (02)

# ரி-20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார் ஸிம்பாப்வேயின் ஷோன் வில்லியம்ஸ்

சர்வதேச ரி-20 போட்டிகளில் இருந்து ஸிம்பாப்வே அணியின் முன்னணி சகலதுறை வீரரான ஷோன் வில்லியம்ஸ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியிருந்தது. இத்தொடரை பங்களாதேஷ் அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

பங்களாதேஷ் அணியுடனான தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ரி-20 போட்டியுடன் ஷோன் வில்லியம்ஸ் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே அணிக்காக 2005 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான ஷோன் வில்லியம்ஸ், அந்த அணிக்காக 14 டெஸ்ட், 156 ஒருநாள் மற்றும் 81 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 4 சதங்கள், 3 அரைச் சதங்கள் உள்ளடங்கலாக 1,034 ஓட்டங்களை எடுத்ததோடு, 21 விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றியுள்ளார். அதேபோல, ஒருநாள் போட்டிகளில் 8 சதங்கள், 35 அரைச் சதங்களுடன் 4,986 ஓட்டங்களைப் பெற்று, 83 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் இவரது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 174 ஆகும்.

81 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 11 அரைச்சதங்களுடன் 1,691 ஓட்டங்களை எடுத்துள்ளதோடு, 48 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

எதிர்வரும் ஜ/ன் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு ஸிம்பாப்வே அணி தகுதிபெறாத நிலையில், பங்களாதேஷ் அணியுடனான ரி-20 தொடர் முடிவடைந்தவுடன் ஷோன் வில்லியம்ஸ் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

ரி-20 போட்டிகளில் இருந்து அவர் ஓய்வு பெற்றாலும், ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து ஸிம்பாப்வே அணிக்காக அவர் விளையாடவுள்ளார். (04)



# சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டை முன்னிட்டு கணேஷா அறநெறி மாணவர்களின் கலாசார விழா





(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல அறநெறி பாடசாலைகளில் ஒன்றான திருக்கோவில், விநாயகபுரம் ஸ்ரீ கணேஷா அறநெறி பாடசாலை பிள்ளைகளின் பாரம்பரிய கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்நிகழ்வுகள் திருக்கோவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை நாடாத்திய இச்சித்திரை கலாசார, விளையாட்டு நிகழ்வு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவாக நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் (கண்ணன்) மற்றும் திருக்கோவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.ரவீந்திரன், ஆசிரியர்களான ஜனா , தர்மசீலன் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஹஜ் யாத்திரிகர்களுக்கான தோழன் நூல் சாய்ந்தமருதில் மீள் வெளியீடு

(எம் எப்.நவாஸ்)

2024 ஆண்டில் முல்தஸம் ஹஜ் ஊடாக புனித ஹஜ் யாத்திரை செல்பவர்களுக்கான கருத்தரங்கும் ஹாஜிகளை வழிகாட்டக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ள ஹாஜிகளின் தோழன் என்ற புத்தகத்தின் மீள் வெளியீட்டு நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் மௌலவி எம்.எஸ்.எம். சுஹைர்தீன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.



இந்நிகழ்வு அல் ஹஜ் எம்.எஸ். எப்.ஆர். முகத்தஸி அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ்.எல். பரீட், மௌலவி சஹ்றான், மௌலவி ரயீஸ் முப்தி மற்றும் மௌலவி சபா மொகமட் அல் நஜாஹி முகத்தமுல் காதிரியி ஆகியோரும் மார்க்க சொற்பொழிவாற்றினர்.

ஹாஜிகளின் தோழன் புத்தகம் தொடர்பில் முன்னாள் கணக்காளர் ஐ.எல்.எம்.பாறூக் உரையாற்றினார். நூல்களின் பிரதிகளை அதிதிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டனர்.






## குடுவில் அறபா நகரில் இலவச மருத்துவ முகாம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், குடுவில் அறபா நகரில் மருத்துவ முகாம் ஒன்றினை நடாத்துமாறு பணிப்புரை விடுத்ததற்கமைவாக, இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ முகாம் அண்மையில் இடம்பெற்றது.

பிராந்திய பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இறக்காமம் பிரதேச வைத்தியசாலையும், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இணைந்து குறித்த மருத்துவ முகாமில் சேவைகளை வழங்கின.

அதிகஷ்டப் பிரதேசமாக காணப்படும் குடுவில் அறபா நகரில் வசிக்கும் மக்களுக்கு குறித்த மருத்துவ முகாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததுடன், அதிகமானோர் கலந்துகொண்டு சிகிச்சைகளையும் பெற்றுக்கொண்டனர்.

அறபா நகர் மக்கள் சுகாதார சேவையினை பெற்றுக்கொள்வதற்கு அதிக தூரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதுடன், போக்குவரத்திற்காகப் பெருந்தொகைப் பணத்தினை செலவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் குடுவில் அறபா நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அங்கு விரைவில் மருத்துவ முகாம் ஒன்றினை நடாத்துவதாகவும் உறுதியளித்திருந்தார். அதன் பிரகாரம் குறித்த மருத்துவ முகாம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் நினைவேந்தலைத் தடுப்பது நல்லிணக்கத்திற்கு அடிக்கும் சாவு மணியே!

## முன்னாள் எம்.பி சந்திரகுமார் கருத்து



சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் நினைவேந்தல் மிக முக்கிய பகுதியாகும். எனவே, அந்த நினைவேந்தல் நிகழ்வைக் கூட தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியாதபடி அரசும் அதன் கட்டமைப்பான பொலிஸாரும் மேற்கொள்ளும் தடை நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் மீது அடிக்கும் சாவு மணியே, என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

2009 இல் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்வதற்குக் கூட முடியாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது.

தெற்கிற்கு ஒரு நீதி - வடக்கிற்கு ஒரு நீதி என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் மீதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் சிறிய தீவில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அரசும் அதன் கட்டமைப்பும் பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது ஒரு காலமும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாத போது இலங்கையில் ஒருபோதும் நிலையான சமாதானம் ஏற்படாது. யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் ஆகின்ற போதும் இனங்களுடைக்கிடையே இடைவெளியும் கூடிக்கொண்டே போகிறதே தவிர குறைவதாகத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட ஓர் இனத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நல்லிணக்கத்தை

வலுப்படுத்த வேண்டுமே தவிர வெற்றிபெற்ற மனநிலையில் இருந்து கொண்டு

தமிழ் இனத்தைக் கையாள்வது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியதாகும்!

எனவே, இந்த அரசு உடனடியாகத் தமிழ் மக்கள் மீதான இவ்வாறான அடக்கு முறைகளைக் கைவிட வேண்டும். உறவுகளை நினைவேந்தும் உரிமைகளில் அரசோ அதன் கட்டமைப்போ

தலையிடக் கூடாது.

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதனை நிறுத்தி, நல்லிணக்கத்தை வளர்தெடுக்க முயற்சிக்க வேண்டும், என்று சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் இலவசமாக வழங்கிய அரிசி உட்கொண்ட 7 கோழிகள் இறந்துள்ளன!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. மன்றில் தகவல்



அரசாங்கத்தினால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரிசியின் தரம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளதா?, என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கருத்தொன்றினை முன்வைத்து உரையாற்றிய அவர், மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரிசியை உட்கொண்டு பாணகமுவ பகுதியில் ஏழு கோழிகள் உயிரிழந்துள்ளன.

அரிசியின் தரம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளதா? எனக் கேட்கின்றேன்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அரிசி வழங்கப்படுகின்றது.

விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பில் கடந்த காலங்களில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் பாணகமுவ பிரதேசத்தில் உள்ள ஒருவர் அரசாங்கத்தினால் கிடைக்கப் பெற்ற அரிசியை, தான் வளர்க்கும் கோழிகளுக்கு உணவாக வழங்கியுள்ளார்.

இதனை உட்கொண்ட 7 கோழிகள் உயிரிழந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் அறிந்துள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியிருந்தார்.

பசுமை
PASUMAI
பசுமை உயிர் உரம்




- பயிர்காப்பரண்
- வேர்ப்புழுகாப்பரண்
- பயிர் சிற்றரண்
- பூச்சி விரட்டி
- தழைச்சத்து ஊக்கி
- பயிர்காப்பு அஸ்திரம்
- பயிர் வீர அஸ்திரம்
- உக்கல் ஊக்கி
- திறமி கரைசல்
- தெங்கு உயிர்
- தெங்கு காப்பரண்
- தெங்கு சிற்றரண்
- தோட்ட உயிர்
- சாம்பல்சத்து ஊக்கி
- வேர் ஊக்கி
- வேர் முடிச்சு ஊக்கி
- மணிச்சத்து ஊக்கி

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

கற்பகவனம் அலுவலகம்
68, குறோசெட் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

+94 787 404 404






## சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் ஆக்னஸ் இலங்கைக்கு வருகிறார்!

சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச்செயலாளர் ஆக்னஸ் காலமர்ட் தனது முதலாவது தெற்காசிய பிராந்திய விஜயத்தை மேற்கொள்ள தயாராகி வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இந்த விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

அந்த விஜயத்தின் போது அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

இதன் போது, முள்ளிவாய்க்கால் போரில் உயிர்நீத்த தமிழர்களின் நினைவேந்தலில் ஆக்னஸ் காலமர்ட் கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மே 24ஆம் திகதி நேபாளத்தின் காட்மண்டுவில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், இளைஞர் சமூகம் மற்றும் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

(04)

## பொருளாதார மாற்ற சட்டமூலம் வர்த்தமானியில் வெளியாகும்!

பொருளாதார மாற்ற சட்ட மூலத்தை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மார்ச் 25ஆம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த சட்டமூல ஆரம்ப வரைவுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி, சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய முறையான சட்டமூலத்தை உடனடியாக சமர்ப்பிக்குமாறு சட்ட வரைவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி தயாரிக்கப்பட்ட வரைவு சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது.

இதன்படி, இது தொடர்பான சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2024இல் வெளியிடப்பெற்றது.